# சென்னை மெட்ரோ இரயில்

**பத்திரிக்கை செய்தி** **நாள் : 29.01.2020**

சென்னை மெட்ரோ இரயில் திட்ட செயலாக்கத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத் அவர்கள் நேற்று (28.01.2020) கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தில் ஆய்வு செய்தார்.

அப்போது, சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் I, கட்டம் I ன் நீட்டிப்புப் பணிகள் மற்றும் கட்டம்-IIற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து, விரிவான ஆய்வை மேற்கொண்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கட்டம் -Iன் நீட்டிப்பு பணிகளை உரிய காலத்திற்குள் முடித்து பயணிகள் சேவையை துவக்குவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும், மெட்ரோ இரயில் பயணிகளுக்காக செய்யப்பட்டுள்ள வசதிகள் இணைப்பு சேவை வசதிகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிர்வனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப., இயக்குநர்கள் திருமதி. சுஜாதா ஜெயராஜ் (நிதி), திரு. ராஜீவ் நாராயண் திவேதி (திட்டங்கள்), திரு. எல். நரசிம் பிரசாத் (இயக்கம் மற்றும் அமைப்புகள்), தலைமைப் பொது மேலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.